# விடுதலைப்புலிகள்

குரல்: 36 — தை - மாசி 1993 — அன்பளிப்பு: ரூபா 5.00

# கிட்டு: தனிமனித சரித்திரம்

# - ஒரு காலத்தின் பதிவு!

## தலைவரின் இரங்கற் செய்தி.



இந்திய அரசின் சதிச்செயலால் வங்கக்கடலில் வீரச்சாவடைந்த எமது இயக்கத்தின் மூத்த தளபதியும் - மத்தியகுழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டுவை நினைவு கூர்ந்து தலைவர் பிரபாகரன் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு:-

மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம்; அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்கமுடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு; அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாதபுயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

கிட்டு, நீ சாகவில்லை;
ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் தலைவர் கூறியுள்ளார்.

*

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

புலிகளின் குரல்

## இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும்

சர்வதேசக் கடற்பரப்பு வழியே தமிழீழம் நோக்கி கேணல் கிட்டுவும் ஏனைய தோழர்களும் பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பலை – சர்வதேச கடற்சட்டத்தையும் மீறி – தடுத்து நிறுத்தி, மரணப் பொறியொன்றை அமைத்து அவர்களைச் சாகடித்ததன்மூலம், மீண்டும் இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்குத் துரோக மிழைத்துவிட்டது.

இந்திய அரசு ஏன் இப்படி நடந்து கொண்டது?

புலிகள் இயக்கத்தை அழிக்க இந்திய அரசு ஏன் இவ்வளவு தீவிரமாக இருக்கின்றது?

இந்திய அரசின் பூகோள - தேசிய நலன்களும், அதன் பிராந்திய மேலாதிக்க வெறியும்தான் இதற்குக் காரணம்.

இலங்கைத் தீவில் 'தமிழீழம்' என்ற தனிநாடு அமைவது தனது தேசிய – பிராந்திய நலன்களுக்குக் குந்தகமாக அமைந்துவிடும் என, இந்திய அரசு அஞ்சுகின்றது.

எனவேதான் தனியரசொன்றை அமைப்பதற்கான எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதில், அது கண்ணுங் கருத்துமாக இருக்கின்றது.

ஆயுதம் தாங்கிய இந்தத் தேசவிடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடாத்தும் புலிகள் இயக்கத்தை அழிப்பதன்மூலம், போராட்டத்தை ஒடுக்க அது கங்கணங்கட்டி நிற்கிறது.

புலிகள் இயக்கத்தின் தலைமைப் பீடத்தைப் படிப்படியாக அழிப்பதன்மூலம், அதைச் சுலபமாகச் சாதித்துவிடலாம் எனத் தீர்மானித்துள்ளது.

இந்திய அரசின் இந்த நயவஞ்சகத் திட்டத்திற்கு இப்போது, எமது மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டுவும் பலியாகிவிட்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலம் ஈழத்தமிழர்கள் மத்தியில் வளர்ந்து வரும் தமிழ்த்தேசிய எழுச்சியைக் கண்டு, இந்திய அரசு அஞ்சுகின்றது. இத் தமிழ்த் தேசியம் வளர்ந்து முதிர்ச்சி பெற்று தமிழீழத் தனியரசு அமையுமானால், அது தமிழ்நாட்டிலும் தன்னாட்சிக் கோரிக்கைக்குப் புத்துயிர் அளித்துவிடுமென, இந்திய அரசு பயப்படுகின்றது. அத்துடன் இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி, இந்திய உபகண்டத்தில் இருக்கும் தேசிய இனங்கள் மத்தியில் தேசியஇன எழுச்சிகளை உண்டுபண்ணி, இந்திய சாம்ராச்சியத்திற்கு ஆபத்தை உண்டாக்கிவிடுமெனவும், இந்திய அரசு கலங்குகின்றது.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைத் தீவில் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் ஒரு அரசியல் உறுதிப்பாடு இருக்க வேண்டும் என்பதில், இந்திய அரசு மிகவும் அக்கறையாக இருந்தது. ஏனெனில், இலங்கைத் தீவில் அரசியல் உறுதிப்பாடு இல்லாவிடின் அதைச் சாட்டாகவைத்து, இங்கே உலக வல்லரசுகள் தலையீடுகளைச் செய்யும் எனவும், அத்தலையீடுகள் இந்திய அரசின் பிராந்திய – பூகோளநலன்களுக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கும் எனவும், இந்திய அரசு எண்ணியது.

இந்த அச்சத்தின் அடிப்படையில்தான் கடந்த 10 வருடங்களாக, இந்திய அரசு, பல்வேறு பரிமாணங்களில் எமது விடுதலைப் போராட்டத்தில் தொடர்ச்சியாகத் தலையிட்டு வருகின்றது.

ஆனால் இந்திய அரசின் இந்த அச்சங்கள் உண்மைக்குப் புறம்பாக மிகைப் படுத்தப்பட்டவைகளாகும்.

இன்று உலகம் மாறிவிட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்து புதியதொரு அரசியல் ஒழுங்கும் பிறந்துவிட்டது. இப்புதிய உலக ஒழுங்கிற்கமைய, இந்திய அரசும் தனது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் தலைகீழ் மாற்றங்களைச் செய்துவிட்டது.

எந்த உலக வல்லரசுகள் இப்பிராந்தியத்தில் தலையீடு செய்துவிடும் என இந்தியஅரசு பயந்ததோ, அதே நாடுகளுடன் இன்று, நெருங்கிய உறவுகளை அது ஏற்படுத்தியுள்ளது.

அந்த வல்லரசுகளுக்கே தனது உள்நாட்டுச் சந்தையையும் திறந்துவிட்டுள்ளது; அவற்றுடன் பொருளாதார உடன்படிக்கைகளைச் செய்துள்ளது; இராணுவ ஒத்திகைகளை நடாத்தி வருகின்றது.

குறிப்பாக அமெரிக்காவும், இஸ்ரேலும் இன்று இந்திய அரசின் நட்புசக்திகளாகவே மாறிவிட்டன.

ஆனாலும், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமான வெளிநாட்டுக் கொள்கையை மட்டும் இந்திய அரசு மாற்றவேயில்லை.

மிகைப்படுத்தப்பட்ட அச்சங்கள் காரணமாகவும், நியாயமற்ற சந்தேகங்கள் காரணமாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பகைமைக் கண்களுடனேயே, இந்திய அரசு இன்றும் பார்க்கின்றது. இது துரதிர்ஷ்டவசமானது.

ஈழத் தமிழர்கள் நடாத்தும் தன்னாட்சிப் போர் தமிழ்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற இந்திய அரசின் வாதம், யதார்த்தத்திற்குப் புறம்பானது.

ஓர் ஆயுதப் போராட்டத்தைப் பிறப்பிக்கச் செய்வதற்கு, அதற்கே உரித்தான புறச்சூழல்கள் இருக்க வேண்டும். தமிழீழத்தின் புறச்சூழல் தமிழ்நாட்டிற்கு இல்லை.

சிங்களப் பேரினவாதத்தால் இங்கொரு தமிழ்இன சங்காரமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பல்லாயிரம் தமிழர்கள் சிங்களப் படைகளினால் கொல்லப் பட்டுவிட்டனர். தமது சொந்த இடங்களிலிருந்தே அகதிகளாக விரட்டப்பட்டுவிட்டனர். சொந்த மண்ணிலேயே சிறைவைக்கப்பட்டிருப்பதுபோல அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழினம் தன்னைப் பாதுகாப்பதற்காக ஆயுதமேந்திப் போராடவேண்டிய வரலாற்றுத் தேவையும், அவசியமும் இங்கு இருக்கின்றது. இல்லாவிடின் ஈழத் தமிழினமே அழிந்துபட்டுவிடும். ஈழத்தமிழினம் எதிர்நோக்கியுள்ள இந்த அபாயத்தை உணராத இந்திய அரசு, எமது மக்களை அழித்தொழிப்பதற்குச் சிங்கள அரசுக்குத் துணைபோவது, தமிழ்இன அழிவுக்கு வழிவகுக்கும்.

தனித்துவமான வரலாற்று நிர்ப்பந்தங்களால் தமிழீழத்தில் தோன்றியுள்ள சுதந்திரப் போராட்டத்தையும் அதன் நியாயப்பாடுகளையும் புரிந்துகொள்வதை விடுத்து, எமது விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு தனது உள்நாட்டுப் பிரிவினைவாதங்களுடன் ஒப்பிடுவதும், அதனால் தனது தேசியநலனுக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதுவதும் மிகவும் தவறான, குருட்டுத்தனமான பார்வையாகும்.

இந்தத் தவறான கண்ணோட்டத்தின் காரணமாகவே, இந்திய ஆட்சிபீடம் அநியாயமான முறையில் எமது விடுதலைப் போராட்டத்தில் குறுக்கிடுகின்றது.

மாறிவரும் இப்புதிய உலகில் தேசிய சுதந்திரம் பெற்றுள்ள எத்தனையோ புதிய நாடுகளை அங்கீகரித்துள்ள இந்திய அரசு, எமது விடுதலைப் போராட்டம் சம்பந்தமாகவும் தனது விடாப்பிடியான நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்.

தமிழீழஅரசு அமைவது இந்திய தேசிய நலனுக்கோ, அல்லது அதன் பிரதேச - பூகோள நலனுக்கோ எந்தவித அச்சுறுத்தலாகவும் அமையாது என இந்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் தமிழீழம் தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை இந்திய அரசு மாற்றியமைத்து, தமிழீழ மக்களின் நியாயபூர்வமான சுதந்திரப் போராட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்க முன்வர வேண்டும். ❋

## இந்திய...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளந்தண்டில் துப்பாக்கிச் சூடுபட்டு நெஞ்சிற்குக் கீழ் உணர்விழந்து படுத்தபடுக்கையாகக் கிடந்த ஒருபோராளியை, 'பொலிஸ் அதிகாரியின் மனைவியைக் கற்பழிக்க முயன்றார்' எனக் குற்றம் சுமத்திச் சிறையில் அடைத்தது. இதுபோன்று அங்கங்கள் ஊனமானபோராளிகள்மீதெல்லாம் அநாகரிகமான முறையில், நகைப்புக்கிடமான குற்றங்களைச் சுமத்தி, அவர்களைச் சிறையிலடைத்தது.

சரணடைய மறுத்து கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலிலேயே இருந்திருப்பார்களேயானால், கப்பலைமூழ்கடித்து விட்டு, தமது போர்க்கப்பலைத்தாக்கவந்த புலிகளின்கப்பலை மூழ்கடித்துவிட்டோம் என, வெற்றி அறிக்கையை இந்திய அரசு வெளியிட்டிருக்கும்.

இந்த நிலையில்தான், சரணடைவதும் இல்லை இந்திய அரசின் பொய்ப் பிரச்சாரத்துக்குப்பலியாவதுமில்லை என்ற முடிவுடன், கேணல் கிட்டு அவர்களுடன் லெப். கேணல் குட்டிசிறி, மேஜர் வேலவன், கப்டன் ஜீவா, கப்டன் றொசான், கப்டன் குணசீலன், கப்டன் நாயகன், லெப். அமுதன், லெப். நல்லவன், லெப். தூயவன், ஆகிய போராளிகளும், வேறு வழிகளின்றித், தமது கப்பலையும் தகர்த்து, தங்களைத் தாங்களே அழித்து, கௌரவமாக வீரச்சாவடைந்தனர்.

கேணல் கிட்டு பிரயாணம் செய்த கப்பலை வழிமறித்து அவர்களை இந்தியாவிற்குக் கொண்டுசெல்ல முயன்ற போதே, அவரை உயிருடன் பிடிக்க முடியாது என்பது இந்திய அரசிற்கும் நன்கு தெரியும். புலிகளின் வீரமரபைப் பற்றி உலகிற்கே தெளிவாய்த் தெரியும். அவமானப்பட்டுச் சரணடைவதைவிடச் சாவையே புலிகள் மேலாக மதிக்கின்றார்கள் என்பது, எல்லோர்க்கும் தெரியும்.

தனது சூழ்ச்சிவலைக்குள் அகப்பட்ட கேணல் கிட்டுவைச் சாகடிப்பதுதான் இந்திய அரசின் நோக்கம். அதற்கான ஒரு நியாயத்தை உலகிற்குக் காட்டுவதற்காகவே மௌனத்தைக் கடைப்பிடித்தபடி, அவர்கள் பயணம்செய்த கப்பலைத் தனது

(10ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசின் சதிச்செயல்



திருவில் நினைவுச் சதுக்கத்தில், தளபதி கிட்டுவின் அம்மாவிற்கு தலைவர் ஆறுதல் கூறுகிறார். அருகில் தளபதி கிட்டுவின் துணைவியாரும், சகோதரரும்.

**தமிழீழ ஆன்மாவைத் துடிக்கச்செய்து தமிழர்களை முழுமையாகவே உலுக்கியெடுத்த - இந்தத் துயரத்திற்குக் காரணம், எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசல்ல; வரலாற்று நண்பனாக நடித்த இந்திய அரசேயாகும்.**

வரலாற்றில் எப்போதாவது சில வேளைகளில் நடைபெறும் ஒரு சம்பவம், ஒரு தேசிய இனத்தை முழுமையாகவே சோகத்தில் ஆழ்த்திவிடுவதுண்டு.

தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் இத்தகைய பல துயர சம்பவங்களை, இந்த விடுதலைப் போராட்ட காலத்தில் சந்தித்து விட்டார்கள்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, கேணல்கிட்டுவும், ஏனைய ஒன்பது போராளிகளும் வீரச்சாவடைந்த வரலாற்றுச் சம்பவம் அமைந்துவிட்டது.

இது தமிழீழ ஆன்மாவைத் துடிக்கச்செய்து துயரத்துள் ஆழ்த்திவிட்டது.

ஈழத்தமிழர்களை முழுமையாகவே உலுக்கியெடுத்த இந்தத் துயர நிகழ்ச்சிக்குக் காரணம், எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசல்ல; எமது வரலாற்று நண்பனாக நடித்த இந்திய அரசேயாகும்.

மேற்குலக நாடுகள் சிலவற்றின் முன்முனைப்புடன், தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றின் ஆலோசனைகளுடன், சர்வதேச கடல்வழியூடாகத் தமிழீழம் நோக்கி வந்துகொண்டிருந்த தளபதி கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் இந்திய அரசு வழிமறித்து, மரணப்பொறியொன்றை அமைத்து, அதற்குள் சிக்கச்செய்து கொன்றுவிட்டது.

கேணல் கிட்டு தமிழீழம்நோக்கி வங்கக் கடல்வழியாக பயணம் செய்து கொண்டிருக்கின்றார் என்ற செய்தியை, இந்திய அரசு அறிந்துகொண்டது. அக் கப்பலில் கேணல் கிட்டு அவர்கள், மேற்குலக சமாதான முயற்சியின் தூதுவனாகப் பயணம் செய்கின்றார் என்பதும் இந்திய அரசுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அக் கப்பலை இடைமறிக்கும்படி இந்திய அரசு கட்டளை வழங்கியது.

சர்வதேசக் கடற்பகுதியில்–பயணம்செய்துகொண்டிருந்த கப்பலை, இந்தியக் கடற்படையின் இரண்டு நாசகாரிக்கப்பல்கள், ஜனவரி 13 ஆம் திகதி அன்று தடுத்து நிறுத்தின. பின்னர் இந்தியக் கரைநோக்கிக் கப்பலைச் செலுத்தும்படி நிர்ப்பந்தித்தன.

இந்தச் செய்தியைக் கப்பலில்இருந்த தொலைதொடர்புக் கருவிமூலம், கேணல் கிட்டு அவர்கள் எமது சர்வதேச தலைமையகத்திற்கு அறிவித்தார். இச்செய்தியைப் பிரான்சில் இருந்தபடி எமது பிரதிநிதி திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள், உலகச் செய்தி நிறுவனங்கள்மூலம் வெளிப்படுத்தியதோடு, சில ஐரோப்பிய நாடுகளுக்கும், தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கும், சில மனிதஉரிமை நிறுவனங்களுக்கும் அறிவித்து, கேணல் கிட்டுவை விடுவிக்க உதவும்படி வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் கேணல் கிட்டுவின் சமாதானப் பயணத்தைப் பற்றியும் பகிரங்கப் படுத்தினார்.

ஜனவரி 15 ஆம் திகதி, உலகெங்கும் இச்செய்தி பரவிவிட்டது. ஆனால் இந்திய அரசு இதைப்பற்றி எதுவுமே கூறாது மௌனமாக இருந்தது. அந்த மௌனத்தின் உள்ளே சூழ்ச்சி வலையொன்று சுறுசுறுப்பாகப் பின்னப்பட்டுக்கொண்டிருந்தது.

கிட்டுவை உயிருடன் பிடிக்கவேண்டும் அல்லது அவரை அழிக்கவேண்டும்; மேற்குலகின் சமாதான முயற்சியைக் குழப்பவேண்டும் என, இந்தியஆளும்வர்க்கம் முடிவெடுத்திருந்தது.

சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இரண்டு நாள் கடற்பிரயாணத்தின் பின், கேணல் கிட்டுவும் தோழர்களும் பிரயாணம் செய்த கப்பல் சென்னைத் துறைமுகத்துக்கு நேரே, இந்தியக் கடல் எல்லைவரை கொண்டுவரப்பட்டது. அங்கே வைத்து, சரணடையும்படி இந்தியக் கடற்படையால்கட்டளையிடப்பட்டது; மறுத்தால் கப்பல் தாக்கப்பட்டு கைதுசெய்யப்படுவீர்கள் என, எச்சரித்தது; எதிர்த்தால் கப்பல் மூழ்கடிக்கப்படும்எனவும்மிரட்டியது.


இதில் எது நடந்திருந்தாலும் அது இந்திய அரசிற்கு வாய்ப்பாகவே முடிந்திருக்கும்.

சரணடைந்திருந்தால் கேணல் கிட்டுவையும் ஏனையோரையும் கைதுசெய்து, பொய்வழக்குகளைப் புனைந்து, அவர்களை அவமானப்படுத்திச் சித்திரவதை செய்வதுடன், எமது இயக்கத்தையும் எமது விடுதலைப்போராட்டத்தையும் சர்வதேச சமூகத்திற்குக் கொச்சைப்படுத்திக் காட்டியிருக்கும். ராஜீவ் காந்தி மீதான கொலைக் குற்றச்சாட்டைக் கேணல் கிட்டு மீது சுமத்தி, அவரை நிரந்தரமாகச் சிறைக்குள் தள்ளிக் கொடுமை செய்திருக்கும்.

இந்திய அரசின் அநாகரிகமான அரசியல் மரபும், காட்டுமிராண்டித்தனமான இழிசெயல்களும் எமக்குப் பழக்கமானவையாகும்.

1987 ஆம் ஆண்டு, இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின், ஒரு காலை இழந்திருந்த கேணல் கிட்டுவிற்கு மருத்துவ வசதி செய்துதருவதாகக் கூறி, தனது விமானப்படை விமானத்தில் அவரை இந்திய அரசு சென்னைக்கு அழைத்துச் சென்றது. பின்னர் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுடனான போர் தொடங்கியபின், 'தகுந்த அனுமதிப் பத்திரமின்றி இந்தியாவிற்குள் வந்தார்' எனக் குற்றம்சாட்டி, அவரைச் சிறைக்குள் தள்ளியது. இதேபோன்று, மருத்துவ வசதி பெறவென இந்திய அரசின் அனுமதியுடன் தமிழ்நாடு சென்ற நூறுக்கும் மேற்பட்ட போராளிகள்மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைப் புனைந்து, அவர்களையும் சிறையில் தள்ளியது.

(2ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ தேசியத்தின் ஆழ் மனதில் ஆழமானவடுவாகப் பதிந்த இந்த வரலாற்றுக் காயம், காலம் காலமாக அழியாது இருக்கும்.

# பிரபாகரனின் பெருந்தளபதி



திருவில். கடலென மக்கள். இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக் கொண்டு நிற்கும் பன்னிரு வரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும், நிரவியும் மக்கள்.

நெஞ்சங்களில் கோபம், அழுகை, கண்ணீர். சோகத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் எழுந்த சினம். அன்புக்குரிய வனை இழந்துவிட்ட தவிப்பு. இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி. அதே திருவில்.

கிட்டண்ணையும், அவர் தோழர்களும் கப்பலில் ...... படமாக ...... நம்பமுடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை. தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.

அம்மா தன் இளையமகனின் இழப்பைத் தாங்க முடியாமல், மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலை வரும் மகன்தான். தேசம் அழுதது.

மக்கள் கூட்டம், தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலை வனைப் பார்த்துக் கை அசைத் தது. உறுதியான அசைவு. கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை.

''தலைவன் இருக்கிறான்'' - கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு. சுதுமலை அம்மன் கோயில் முன்றிலில் இலட்சக் கணக் கான மக்கள் திரண்டி ருந்தார்கள். முகங்களில் தலை வனைக் கண்ட மகிழ்ச்சி.

தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளிற்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

''அடுத்ததாகத் தளபதி கிட்டு அவர்கள்பேசுவார்''! மக்களின் ஆரவாரம். ஆர்ப்பரிப்பு.

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத் திருக்கும் அன்பைத் தலைவ னுக்குக் காட்டும் துடிப்பு, உற் சாகம். அந்த ஆர்ப்பரிப்பிற்குள் வார்த்தைகள் தெளிவாக விழ வில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது; அப்படியே பதிந்தது.

''தலைவர் இருக்கிறார்; அவரை நம்புங்கள்''. ஒரு தூய உள்ளத்திலிருந்து வந்த சத் தியமான வார்த்தைகள். இன் றும்கூட அந்த வார்த்தைக ளுக்குத்தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கிறது!

* * *

கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடு கட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல.

தங்களுக்காக சாவுக்கு முன் னால் நிற்கும் வீரன்ஒருவனை நேசிக்க, எவருக்குமே காரணங் கள் தேவையில்லை.

கிட்டண்ணை சிறந்த தொரு போராளி. வீரன். அவ ரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல் ...... எல் லாவற்றையுமே மக்கள் இரசித் தனர். விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது.

மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம், வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப் போனது, கிட்டண்ணையின் காலத்தில்தான்.


''கோட்டையில இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்'' மறு கணம், அவசரமாக மேற்சட் டையைக்கூட ஒழுங்காக அணி யாமல், கிட்டண்ணை அங்கு நிற்பார்.

'கிட்டர் நிக்கிறார்; இனிப் பயமில்லை'. மக்களின் மனங்க ளில் துணிவு பிறக்கும். இரா ணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுதும் வெற்றிக் களிப்பு. மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல் வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இரா ணுவத்தினர் புறப்பட்டாலும், அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ் வொருநாளும் சண்டை.

அந்தக் காலங்களில்தான், கிட்டண்ணை மக்களின் மனங் களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான –அழிவற்ற– வாழ்வு; கோபித்தாலும், சண் டையிட்டாலும் சாகாத வாழ்வு.

வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அரு கில், விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டு நடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழ வர்களுக்கோ தாராளமாக நேர



மிருந்தது. கிட்டண்ணைக்கோ அப்படி இல்லை. ஆனாலும் அந்த மாலை நேரங்களை அவர் விரும்பினார்.

அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவை இல்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால் ...... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.

வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முடியப்பட்ட காற்சட் டைகளுடன் 'சிறிய கிட்டுக்கள்' நிற்பார்கள். இடுப்பில் கிட்டண் ணையின் '.357 மக்னம்' சுழற் துப்பாக்கியைப் போன்று இழு பட்டபடி, வளைந்த தடி ஒன்று தொங்கும்.

கள்ளன் – பொலிஸ் விளை யாட்டெல்லாம் மறைந்து, புலி கள் - இராணுவ விளையாட்டுத் தொடங்கி இருந்தது.

விளையாட்டிலும் 'சின்னக் கிட்டுகள்' ஒரு நாளும் தோற் பதில்லை. வெற்றி; என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூட கிட்டு மாமா தோற் பதை, அவர்கள் விரும்புவ தில்லை.

இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால்தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்தின ருடன் நடந்த சண்டை ஒன் றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகி, சில நாட்கள் சென்றிருந்தன.

அப்போதுதான், தேச விரோதிகளால் கிட்டண் ணைக்குக் குண்டெறியப்பட் டது.

குண்டு வெடித்தது தெரியும். ஆனால் கிட்டண்ணைக்கு என்ன நடந்ததென்பது மக்க ளுக்குச் சரியாகத் தெரியாது.

தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது. மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவித்தது.

உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது, ஓரளவு ஆறு தலாக இருந்தது. ஆனாலும் கவலை முற்றாகத் தீரவில்லை.

**எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்க முடியாத இழப்பு கள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும்; பின் 'தலைவன் இருக்கிறான்' எனத் தொடர்ந்து செல்லும்.**

ஏனெனில் கிட்டண்ணை ஒரு காலை இழந்திருந்தார்.

1987, மே நாள். மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்.

''கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்''. மக்கள் முகங்களில் மகிழ்ச்சி; கிட்டண்ணையைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல்.

கிட்டண்ணை பேசினார். தரமானதொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு.

அன்று மக்களிடையே உற்சாகமும், மகிழ்ச்சியும், கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.

* * *

கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக்கொள்ளும் கோபம். மறு கணம் எங்கென்று தெரியாது மறைந்துவிடும் கோபம்.

தோழர்களுக்குஅடியும்விழும். ஆனாலும் ஒருவரும் கோவிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதும் இல்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள்ளிருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.

சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவதொரு தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும், அவர்கள் கண்டவர்கள்;சேர்ந்து அனுபவித்தவர்கள்; அதனால்தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானது. இயக்கத்தின் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது.

கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும், திறமையும் மனிதர்களை வென்றன.

குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொதுவாகத் தவறுவதில்லை. அதுஅவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களூர்ப் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பெருமை.

ஆபத்தான வேளைகளில் கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைகளின்போது தேவையற்ற துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒருபோதும் செய்ததில்லை.

இதெல்லாவற்றிற்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கிறது.

உமையாள்புரம். நிலக்கண்ணிகளைப்பொருத்திவிட்டு, இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது.

கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாதகாலம். இராணுவவண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெடித்தன.

புலிகள் வெவ்வேறு திசைகளால் பின்வாங்கினார்கள்; அல்லது தப்பி ஓடினார்கள்.

வீதிக்கு அருகாக தண்டவாளம் இருந்தது. அதன் இருபக்கமும் வெட்டை.

கவசவாகனங்கள் இரண்டு, துப்பாக்கி ரவைகளை அள்ளி வீசிக்கொண்டு நெருங்கி வந்தன.

ஒரு சிலர் விழலாம் என்ற நிலை. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி, தனது ஜி. 3 துப்பாக்கியால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார்.

தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ்வாகனம் துரத்தி வந்த வேகத்திற்கு சரிந்து புரண்டது.

அவரது முதலாவது களமும் சாதனைதான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொரு களமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது; பகைவர்களைக் கலங்கடித்தது.

கிட்டண்ணை சிறந்தொரு வீரன். அதைப் போன்றுதான், கமராவைத் தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன். அது தொலைக்காட்சிக் கமராவாக இருந்தாலும் சரி......

சிறந்ததொரு இலக்கியவாதி. எழுத்தாளன். போராளிகள் தொடர்பாக – போர்முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக – உள்ளத்தைத் தொட்டுவிடும் உணர்வோடு அவரின் எழுத்துக்கள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும், நிதர்சன தரிசனமும் அவர் எழுத்துக்களில் பரவிவிடும். எல்லாவற்றுக்கும் மேலாக அவரின் உயிர்போன்ற மக்கள் மீதான நேசம், அவர் எழுத்துக்களில் பரிணமிக்கும்.

* * *

சரி, இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழந்துதான் போனோமா...? உண்மைதான். ஏற்றுக்கொள்ள முடியாத தெளிவான உண்மை.

''நாம், ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரிச்சயமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து, தளர்ந்து .....எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்''? மேஜர் அல்பேட்டின் இழப்பை அடுத்து அவரைப்பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.

நாங்கள்கூட, ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில், எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று, ஆயிரக் கணக்கான தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எங்கள் இதயங்கள் பலமுறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட

(6ஆம் பக்கம் பார்க்க)

# வீரம் - விவேகம்

இஸ்ரேலிய பாணியை சிங்களப் படைகள் அச்சொட்டாகக் கடைப்பிடித்த காலம் அது.

தமிழ் இளைஞர்கள்மீதான சித்திரவதை வடிவங்களானாலும் சரி, படுகொலை முறைகளானாலும் சரி, தாக்குதல் நடவடிக்கைகளானாலும் சரி, எல்லாமே இஸ்ரேலிய உளவு நிறுவனமான 'மொசாட்' டின் ஆலோசனையின்பேரிலேயே நடாத்தப்பட்டன.

சுதுமலைத் தாக்குதலையும் அத்தகைய இஸ்ரேல் பாணியிலேயே சிங்களப் படைகள் நடாத்தின.

1985 ஆம் ஆண்டு, மார்கழி மாதம் 21 ஆம் திகதி காலை வேளை.

கிட்டண்ணை தங்கியிருந்த சுதுமலை முகாம்மீது, இராணுவத்தினர் ஒரு கொமாண்டோ அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.



மூன்று உலங்குவானூர்திகளின் துணையுடன் வான்வழி வந்த இராணுவத்தினர், இந்த அதிரடியை நிகழ்த்தினர்.

சுதுமலை முகாமிலிருந்து சிறிது தூரத்தில், திடீரென இரண்டு உலங்கு வானூர்திகள் தரையிறங்கி இராணுவத்தினரை இறக்கிவிட்டு மேலெழுந்தன. எல்லோரிடமும் நவீன ஆயுதங்கள் (ஏ.கே. ரக துப்பாக்கிகள், எல். எம். ஜி, ஆர். பி. ஜி., மோட்டார்கள்.)



தரையிறக்கப்பட்ட ஓரிரு நிமிடங்களில், முகாமுக்கு மிக அருகில் சண்டை தொடங்கியது.

எமது போராளிகளிடம் சாதாரண துப்பாக்கிகள் (எஸ். எம். ஜி., ரிப்பீற்றர், 303 போன்றன). கிட்டண்ணையிடமிருந்து நம்பிக்கையூட்டக்கூடிய விதத்திலும், தெளிவாகவும், உறுதியாகவும் கட்டளைகள் பிறக்கின்றன.

கிட்டண்ணையின் தலைமையில் சண்டை தீவிரமாக நடக்கின்றது. 'வோக்கி ரோக்கி' மூலம் அருகிலிருந்த முகாம்களை அழைத்து, அங்கிருந்தும் போராளிகளை வரவழைத்து, அவர்களைக்கொண்டு வேறு திசைகளிலிருந்தும் இராணுவத்தினரைத் தாக்குவிக்கின்றார்.

தன்னிடமிருந்த குறைந்த ஆயுதபலத்தைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றார். துணிவுடன் நின்று எதிரியை எதிர்கொள்கின்றார்.

சிங்கள இராணுவம் நடாத்திய அன்றைய கொமாண்டோ தாக்குதல் வெற்றிபெறவில்லை. அத்தாக்குதல் முறியடிக்கப்பட்ட அதிர்ச்சியினால் – குழப்பத்தினால் – அச்சத்தினால்– அதேபாணியிலான அதிரடிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதில் இராணுவம் அக்கறை காட்டவில்லை.

தற்செயலாக அந்தக் கொமாண்டோத் தாக்குதல் வெற்றிபெற்றிருந்தால், வெற்றிக் களிப்பில் மீண்டும் மீண்டும் சிங்களப் படை பல இடங்களில் எமது நிலைகள்மீது பல தாக்குதல்களை நடாத்தியிருக்கும்; எமக்குச் சேதங்களையும் ஏற்படுத்தியிருக்கும்.

ஆனால் அப்படிப் பெரிதாக நடைபெறவில்லை. இதற்குப் பிரதான காரணம், அன்றைய எமது சுதுமலை முறியடிப்பில் கிட்டண்ணை கொடுத்த வீரம் மிகுந்த – விவேகம் நிறைந்த– தலைமைப் பாத்திரமே ஆகும். ❋

## "கால்களை இழக்கலாம், கண்ணை இழக்கலாம் தன்னை இழக்கினும், தாயகம் இழக்கிலோம்".



விடுதலை நெருப்பாய் கனன்ற வீரனே!
விடிவை நோக்கியே விரைந்த பறவையே!
விழிகள் மீதிலோர் நதியினைத்தந்தாய்
வீழ்ந்து கதறுமோர் நிலையினைத்தந்தாய்.

கயவர் படைதனை கலக்கியடித்ததும்,
களத்திலாடியே கருவிகள் மீட்டதும்,
கோட்டையை மறித்தோர் அரணாய்நின்றதும்,
நேற்றுப்போலவே நெஞ்சினில் உள்ளது.

காலை இழந்தும்நீ காவலிருந்தாய்!
கண்துயிலாது களத்தில் திரிந்தாய்!
"கால்களை இழக்கலாம், கண்ணைஇழக்கலாம்
தன்னை இழக்கினும், தாயகம் இழக்கிலோம்".

சத்தியம் செய்தாய்; சங்கென ஆர்த்தாய்!
சண்டைக்களங்களில் சாதனை புரிந்தாய்!
தாயக மீட்பே குறியெனக் கொண்டாய்!
தன்னையே இன்று தற்கொடை ஈந்தாய்!

இங்கிவர் மேலும் தாக்குதல் புரியலாம்;
இந்தியா இன்னும் சூழ்ச்சிகள் செய்யலாம்;
இன்னுமோர் பெரும்படை எதிர்வந்து நிற்கலாம்;
எங்கும் பிணங்களாய் எரிந்து கருகலாம்.

கண்போல் நீங்கள் காத்த மண்ணிது!
சிந்துகுருதியால் சேர்த்த நிலமிது!
உங்கள் உறுதியை உயிரினில் சுமந்தோம்!
பொங்கும் விடுதலைப் போரிலே வெல்வோம்!

\- புவி ❋

### பிரபாவின் பெருந்தளபதி

*( 5 ஆம் பக்கத் தொடர்ச்சி )*

எம்மால் இழப்புகளைத் தாங்க முடிவதில்லையே! அதிலும் கிட்டண்ணையை......

'கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்துவிட்டார்களாம்' – நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி.

'இந்தியர்கள் விடமாட்டார்கள். அதுவும் கிட்டண்ணையை நிச்சயமாக விடமாட்டார்கள்'.

'அணு அணுவாகத் திலீபன் சாகும்வரை பார்த்துக்கொண்டிருந்த இந்தியா; தமிழர்கள் துடிக்கையிலும் புலேந்தி அம்மானையும் குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரண வலைக்குள் சிக்கிவிட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது'! தெரிந்த செய்திதான். ஒவ்வொருவரின் மனமும் சொன்ன செய்தி.

அவர்களுக்குத் தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அமுக்கப்பட வேண்டும்; அழிக்கப்பட வேண்டும். அதற்காக அவர்கள் எதுவும் செய்வார்கள்.

சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசுக்குத் தேவையற்றன. அதை மாற்றவும், திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும், மனச்சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வர்க்கத்திற்கு இயல்பாகவே இல்லை.

சரணடைவதா! அது புலிகளின் மரபு இல்லை. அதுவும் கிட்டண்ணை! தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி – தமிழர்களின் மானச் சின்னம் – அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன் – தலைகுனிவது... சித்திரவதைப்பட்டு, அவமானப்பட்டுச் சாவது......

'கிட்டண்ணை காப்பாற்றப்பட வேண்டும்'. தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக் கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

'எமது சிறிய படகு, அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால், பாரிய நேவிப் படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக்கொண்டு பாய்ந்து வருகின்றன.

அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச் சீறிக்கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.

ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.

நேவிப் படகிலிருந்து பாய்ந்து வந்த 'ரேசர்' ரவுண்ஸ் ஒன்று எமது படகின் எரிபொருள் தாங்கியைத் துளைக்க..... படகு தீப்பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகிறது.

பருத்தித்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப்படுவதை அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பி வரும் என்று பார்த்துக்கொண்டிருக்க, எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.

ஆனால், செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை; கடல்'.

பல வருடங்களுக்கு முன்பு சிறிலங்கா கடற்படையால் எமது தோழர்கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்ட பொழுது, 'திரை கடல் ஓடினோம் – திரவியம் தேடி அல்ல' என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார்.

ஆனால் இன்று... நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக்கப் பிடிக்குள் கிட்டண்ணை...... நாங்கள் செல்ல முடியாது. ஏன்?

கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க்கப்பல்கள். சரணடைய வேண்டும்; அல்லது அந்தப் பாரிய போர்க்கப்பல்கள், சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும். பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க்கப்பலைத் தாக்கவந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.

இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின்மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும்.

'சரணடையப் போவதில்லை', சாவு நிச்சயமாகிப் போனது. ஆனால் அந்தச்சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்க வேண்டும்; சரித்திரம் படைக்க வேண்டும்; தாய் நிலத்தைத் தலை நிமிரச் செய்ய வேண்டும்.

சண்டைக் களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற, நூற்றுக்கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று......

குட்டிசிறி அருகி[illegible]றான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரிய ஆளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.

அவன் அழுதிருப்பான்; தனக்காக அல்ல கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒருபோதும் கலங்கியவனில்லை.

இப்போது கலங்கி இருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லாரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப் பேய்கள் இறங்கி வரப்போவதில்லை.

எங்கள் தொலைத் தொடர்புக் கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக்கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி– கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன் –

சாவின் விளிம்பில்....

முடிவு உறுதியாகியது. ஒரு கணத்தில் கப்பல் சிதறும்; காணாமற் போகும்.

கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள்.

தேசம், அம்மா, அண்ணன், அன்பான மனைவி, தன்னில் உயிரையே வைத்திருக்கும் தலைவன் எல்லாருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒரு கணம் வந்துவிட்டுச் சென்றிருக்கலாம்; ஆனால் வெளித் தெரியாது.

விடைபெற்றிருப்பார்கள்– தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து.....

கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத் தொடர்புக் கருவி, நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா...... வருகிறதா......

'கிட்டண்ணையை இழந்துவிட்டோம்'.

கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது; தவித்தது; கதறி அழுதது; ஒரு கணம் தயங்கி நின்றது.

தாங்க முடியாத இழப்பு.


எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்க முடியாத இழப்புகள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் 'தலைவன் இருக்கிறான்' எனத் தொடர்ந்து செல்லும்.

அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்!

❋

# துணிவு - முயற்சி


**1984 ஆம்** ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு காலைப் பொழுது. கிட்டண்ணை மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டு, யாழ் - பருத்தித்துறை வழியாக அச்சுவேலி பஸ் நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். ஏதோ ஒரு வேலை காரணமாக வேறு இரு இளைஞர்களையும் ஏற்றிக் கொண்டு வந்திருந்தார். மோட்



டார்சைக்கிளில் மொத்தம் மூவர். அந்தக்காலம் சிங்கள இராணுவம் குடாநாடெங்கும் தங்கு தடையின்றி உலவிய காலம்.

அச்சுவேலி பஸ் நிலையத்தை அண்மிக்க முன் உள்ள வசாவிளான் வீதிச் சந்தியில் இராணுவத்தினர் நிற்பதை, திடீரெனக் காண்கின்றார். பின்னால் இருந்தவர்களை பதற்றமடையாது இருக்குமாறு கூறிவிட்டு, தொடர்ந்தும் மோட்டார் சைக்கிளைஓட்டினார்.

ஆனாலும் இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளை மறித்து விட்டனர். ஏதோ கூறித் தப்பிக்க



முயல்கின்றனர். இதற்கிடையில் கிட்டண்ணையின் சட்டைப் பையில் இருந்த சயனைட் குப்பியை இராணுவத்தினர் கண்டுவிட்டனர். அந்தக்காலத்தில் எமது சயனைட் குப்பி பற்றி எதிரிக்கு எதுவும் தெரியாது. அந்தக்குப்பி என்னவென்று கிட்டண்ணையிடம் விசாரிக்கின்றனர். தொய்வு நோய்க்குப் பயன்படுத்தப்படும் மருந்து எனக் கூறித் தப்பிக்க முயல்கிறார். ஆனாலும் விசாரித்துவிட்டு விடுவதாகக்கூறி, பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மற்றைய இரு இளைஞர்களுள் ஒருவரை இராணுவ 'ட்றக்'கில் ஏற்றிவிட்டு, கிட்டண்ணையை மற்றையவருடன் மோட்டார் சைக்கிளில் வரும்படி பணித்து விட்டு, பலாலி இராணுவ முகாம் நோக்கிச் செல்கின்றனர்.

வாகன அணிகளுக்கு நடுவே மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருக்கின்றது.

அச்சுவேலி - வசாவிளான் பாதையில், 'மக்கோணா' என அழைக்கப்படும் சிறுவர் சீர்திருத்த பாடசாலைக்குச் செல்லும் ஒழுங்கைக்கு அருகில், வாகன அணி செல்கின்றது.

தப்பியோடுவதற்குச் சந்தர்ப்பமும் இடமும் இதுதான் என, கிட்டண்ணை முடிவெடுக்கின்றார்.


திடீரென அந்த ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிளைத் திருப்பி, வேகத்தை அதிகரிக்கின்றார்.



அதிர்ச்சியடைந்த இராணுவத்தினர் வாகனங்களை நிறுத்திச் சுட எத்தனிக்கும் முன், மோட்டார் சைக்கிள் சுமார் 50 யார் தூரம் சென்று விடுகின்றது.

துரதிர்ஷ்டவசமாக, ஒழுங்கை வேலியில் கட்டப்பட்டபடி ஒழுங்கையின் எதிர்ப்பக்கத்தில் நின்று மேய்ந்து கொண்டிருந்த மாட்டின் கயிற்றில் சிக்கி, மோட்டார் சைக்கிளுடன் கிட்டண்ணை வீழ்ந்து விட்டார். அருகில் சிறுபற்றைகளும், அப்பால் வாழைத் தோட்டங்களும் இருந்தன.


சில வினாடிகளில் மோட்டார் சைக்கிள் வீழ்ந்துகிடந்த இடத்துக்கு விரைந்து வந்த கவசவண்டி, ரவைகளைப் பொழிந்து தள்ளியது. அருகிலி



ருந்த வாழைகள் ரவைகள் பட்டு முறிந்து வீழ்ந்தன.

ஆயினும், கிட்டண்ணை தப்பியோடி விட்டார்! ❋

# சிறந்த இராஜதந்திரி



விஜயகுமாரணதுங்கா குழுவுடன்: மதிநுட்பம் மிக்க செயற்பாடு.

**கே**ணல் கிட்டுவினது மறைவு தமிழீழ மக்கள் சந்தித்த மிகப்பெரியதொரு இழப்பாகும்.

பெறற்கரிய போர் அனுபவம் வாய்ந்த ஒரு மூத்த தளபதியை– பலதுறை ஆற்றல்கொண்ட ஒரு புரட்சிவாதியை – எமது இயக்கம் இழந்துவிட்டது.

ஒரு மாவீரனாக, ஒரு சிறந்த போர்த் தளபதியாக, ஆற்றல் மிக்க ஒரு நிருவாகியாக, ஒரு கலைஞனாக கேணல் கிட்டுவை ஏற்கெனவே தேசம் இனங்கண்டு வைத்திருக்கின்றது. ஆனால், உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் கேணல் கிட்டு ஒரு தலைசிறந்த இராஜதந்திரியாக இருந்துள்ளார் என்பது, பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கேணல் கிட்டுவினது வீரச்சாவையடுத்து, உலக மனிதாபிமான நிறுவனங்களில் ஒன்றான 'குவேக்கர்ஸ்' இலண்டனில் வெளியிட்ட அறிக்கையில், கேணல் கிட்டுவினது இராஜதந்திரப் பணிகளைச் சுட்டிக்காட்டியதுடன், அவரது செயற்பாடுகளைப் பாராட்டியும் இருந்தது.

ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை சிங்கள அரசும் இந்திய அரசும்இணைந்து, புலிகள் எதிர்ப்புப் பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டபடியுள்ளன. புலிகளை ''ஒரு போர் வெறியர்கள்''என்றும், ''சமாதானத்திற்குவிரோதமான சக்தி''யென்றும் சர்வதேச சமூகத்துக்குக்காட்டி, புலிகள் இயக்கத்திற்கு அபகீர்த்தி உண்டு பண்ண முயன்றுகொண்டிருக்கின்றன.

இந்தச் சதிமுயற்சியைச் செயலிழக்கச் செய்ய, கேணல் கிட்டு அவர்கள் தீவிர நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

மேலை நாடுகள் பலவற்றின் அரசியல்தலைவர்களை, இராஜதந்திரிகளை, மனித உரிமை நிறுவனங்களின் முக்கிய பிரமுகர்களை, அரசியல் செல்வாக்குள்ள சில தனிநபர்களை அடிக்கடி சென்று சந்தித்து, எமது இயக்கத்திற்கெதிராக முடுக்கிவிடப்பட்டிருக்கும் பொய்ப் பிரச்சாரத்தின் உள்நோக்கங்களைத்தெளிவுபடுத்தினார். அத்துடன் அவர்களுடன் தனிப்பட்ட உறவுகளையும் – தொடர்புகளையும் வைத்து, அதை வளர்த்தும் வந்தார்.

ஆயுதம் தாங்கிய எமது விடுதலைப் போராட்டத்தின் தவிர்க்கமுடியாத தேவைப்பற்றியும், சிங்களப் பேரினவாத அரசின் அடக்குமுறை பற்றியும், இன அழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் இப்பிரதிநிதிகள்மூலம் சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்கினார். இதன் காரணமாக சில மேலைத்தேய நாடுகளும் சில மனித உரிமை அமைப்புகளும் எமது போராட்டத்தில் அக்கறைகொள்ளத் தொடங்கின. இதன் விளைவாக இந்த நாடுகளும் அமைப்புகளும் சிங்கள அரசின் இனவெறிச் செயல்களைக் கண்டிக்கவும், அதன் மீது அழுத்தங்களைப் பிரயோகித்துத் தட்டிக் கேட்கவும், முயன்றன.

இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய மேலைநாடுகள் சிலவும், மனித உரிமை நிறுவனங்கள் சிலவும், கேணல் கிட்டுவுடன், இனப்பிரச்சினை தொடர்பாக மறைமுகமாகப் பேச்சுக்களை நடாத்தின. கேணல் கிட்டுவை ஒரு சிறந்த இராஜதந்திரியாகவும் மேலைத்தேய சமூகம் கணித்தது.

இந்திய ஆக்கிரமிப்புக்கெதிராக இங்கொரு பெரும் போர் நடந்துகொண்டிருந்தபோது, இந்திய மண்ணில் அப்போது இருந்த கேணல் கிட்டு, இந்திய அரசின் மூர்க்கத்தனமான இராஜதந்திரத்திற்கு முகங்கொடுத்தபடி, ஒரு போர் நிறுத்தத்திற்கான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். இந்திய புலனாய்வுத்துறையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தி, ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த அயராது பாடுபட்டார். எனினும் அவரது முயற்சி இந்திய இராணுவத்தின் துரோகத்தனத்தால் முறியடிக்கப்பட்டது. லெப். கேணல் ஜொனியை இந்திய புலனாய்வுத்துறையின் சிபார்சுக் கடிதத்துடன், தலைவருடன் தொடர்புகொள்ள தமிழீழம் அனுப்பிவைத்தபோது,

(8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## Liberation Tigers of Tamil Eelam

தமிழீழம்.
17.01.1993

## கேணல் கிட்டு, மற்றும் 9 புலிகளின் வீரச்சாவுக்கு இந்திய அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்

எமது மூத்த தளபதியும், எமது இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினரும், சர்வதேச தலைமைச் செயலகத்தின் பொறுப்பாளருமான கேணல் கிட்டுவையும், மற்றும் ஒன்பது போராளிகளையும் மரணப் பொறிக்குள் தள்ளி அவர்களை அழித்தமைக்கு, இந்திய அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இந்திய அரசின் இந்த வஞ்சகச் செயல் தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர இயக்கத்திற்கு இழைக்கப்பட்ட இன்னுமொரு மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். இது இந்தியாவின் இரத்தக் கறைபடிந்த ஆதிக்க அரசியலுக்கு மேலும் இழுக்கைத் தேடிக்கொடுத்துள்ளது. தமிழீழ மக்கள்மீதான இனப்படுகொலைக்கு இந்தியா கைகொடுத்து உதவுகின்றது என்பதை, இச்செயல் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிடும் நோக்கிலும் தென்னாசிய பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளும் இலக்கிலும் இந்திய அரசு நீண்டகாலமாகவே தமிழர் பிரச்சினையில் தலையிட்டு வருகிறது. நண்பனாக நடித்து துரோகங்களை இழைத்து வருகிறது. சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழரின் விடுதலை இயக்கமாகிய புலிகள் இயக்கத்தை ஒழித்துக்கட்ட முயன்று வருகின்றது. தமிழீழ மக்களின் தேசியஅபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

நாம் ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள்இனம் என்பதையும் இன அழிவுக்கு எதிராக நீதியின் அடிப்படையில் உரிமைப்போர் நடத்தி வருகிறோம் என்பதையும் அலட்சியம் செய்துவரும் இந்திய அரசு, எமது மக்களின் சாவிலும் அழிவிலும் தனது பூகோள ஆதிக்க அரசியலை முன்னெடுக்க முயல்கிறது. சிறிய தேசிய இனமாக தனித்து நின்று போராடி, உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக் குரலையும் இந்தியா நசுக்கிவிட முயல்கிறது. தமிழீழ கடற்பரப்பை முற்றுகையிட்டு, தமிழ்நாட்டுடன் எமது தொடர்புகளைத் துண்டித்து, எமது கடற்போக்குவரத்தைத் தடைசெய்து எம்மைப் பலவீனப்படுத்தி, எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களைக் கொன்றழிப்பதற்கு, இந்தியா துணை போகின்றது.

இந்தியாவின் சதி வலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை, எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவிடம் தர்மம் கேட்ட திலீபன், இந்திய மத்தியத்துவத்தை நம்பிய புலேந்திரன் - குமரப்பா, இந்தியாவிலிருந்து சமாதானத் தூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப்பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கிய திட்டத்துடன், சமாதானத் தூதுவனாகவே தளபதி கிட்டு தமிழீழம் நோக்கிய கடற்பயணத்தை மேற்கொண்டார். வேறெந்தப் போக்குவரத்துப் பாதைகளும் இல்லாததால், சகலரும் சுதந்திரமாக நடமாடும் சர்வதேச கடல் மார்க்கமாக அவர் தமது தாயகம் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தார். இந்தியக் கடற்படை கிட்டுவின் கப்பலை இடைமறித்தபோது, கிட்டுவின் சமாதான முயற்சி பற்றி இந்திய அரசிடம் கூறப்பட்டது. ஆனால் இந்திய அரசு ஐரோப்பிய சமாதான முயற்சியை விரும்பவில்லை. மேற்குலக மத்தியத்துவம்மூலம் தமிழர் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை. அத்துடன் தனது கடலாதிக்கப் பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்துவிடவே இந்தியா விரும்பியது: இதனால் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்குப் பலியாக நேர்ந்தது

தளபதி கிட்டுவும் ஏனைய புலிவீரர்களும் இந்தியாவின் படைபலத்துக்கும் பயமுறுத்தலுக்கும் தலைகுனியவில்லை. எமது இயக்கத்தின் வீரமரபுக்கு ஒப்ப தம்மைத்தாமே அழித்து, தமிழினத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தினர்.

இந்தத் தியாக வரலாற்று நிகழ்வு, இந்திய அரசின் அரக்கத்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'.

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## சிறந்த...

( 7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய இராணுவம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேவிபுரத்தில்வைத்துச் சுட்டுக் கொன்று, சமாதான முயற்சிக்கு ஆப்பு வைத்தது.

1986 ஆம் ஆண்டு - யாழ்ப்பாணத் தளபதியாக கிட்டு அவர்கள் இருந்தபோது- வரலாற்றுப் புகழ்மிக்க கைதிப் பரிமாற்றம் ஒன்று நடந்தது. அக்கைதிப் பரிமாற்றமே - முதற்தடவையாக - கேணல் கிட்டுவை ஒரு இராஜதந்திரியாக வெளிப்படுத்தியது.

மன்னார் - அடம்பனில் சண்டை ஒன்றில் நாம் கைது செய்திருந்த இரண்டு இராணுவத்தினரை வைத்துக்கொண்டு, ஒரு கைதிப் பரிமாற்றத்திற்கான அழைப்பை விடுத்தார். ''போர்க்கைதிகள் பரிமாற்றப்படுவது இரு நாடுகளுக்கிடையேதான் நடக்கும்'' என, அன்றைய சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சர் அறிக்கை விட்டார். திரு. அத்துலத்முதலியின் வார்த்தை உண்மையானதே என நிருபிக்க, கிட்டு விவேகமான முறையில் பதில் நடவடிக்கைகளை எடுத்தார். சிங்கள அரசியல்வாதிகள் சிலருடனும் இராணுவ அதிகாரிகள் சிலருடனும், இராஜதந்திரப் பேச்சுக்களைத் தொடக்கினார். இறுதியில் ஒரு இராஜதந்திர வெற்றியைப் பெற்றார்.

இத்துடன், உலகநாடுகளிலெல்லாம் வசித்தபடி எமது விடுதலைப் போராட்டத்திலிருந்து ஒதுங்கி வாழும் சர்வதேச தமிழ் சமூகத்தை, போராட்டத்தில் ஆர்வங்கொள்ள வைத்ததிலும், கேணல் கிட்டுவுக்கு நிறையப் பங்குண்டு.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் - அவர்கள் எண்ணிக்கையில் குறைந்து இக்கொன்றாக வாழ்ந்தாலும் - பொருளாதார ரீதியாகவும் அறிவியல்ரீதியாகவும் ஒரு பலமான சர்வதேச அரசியற் சக்தியாகவே இருக்கின்றார்கள்.

இதைக் கருத்திற்கொண்டு தான் சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள், தமிழர்களை யூதர்களுடன் ஒப்பிட்டு, 'பலம் வாய்ந்த ஒரு சர்வதேச சிறுபான்மை இனம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்தேடி இலட்சக் கணக்கில் வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்களை, ஆங்காங்கே பல்வேறு அமைப்புகள் மூலம் இணைத்து, அவர்களைத் தாய்நாட்டுப் பற்றிலிருந்து அந்நியமாகாமல் பார்த்ததுடன், இனத் தனித்துவங்களிலிருந்து சீரழியாமல் பாதுகாத்ததிலும் கேணல் கிட்டு தீவிர பங்கு வகித்தார்.

ஈழத்தமிழர்கள் எங்கெங்கு அதிகளவில் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று அவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்ததுடன், தமிழில் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளிவரச் செய்து, தாயகச் செய்திகளையும் போராட்டச் செயற்பாடுகளையும் - விளக்கங்களையும் கொடுத்து, சர்வதேச தமிழ்ச் சமூகத்தைப் போராட்டத்துடன் இணைத்து வைத்திருக்கப் பெரும்பாடுபட்டார்.

இந்த நிலையில்தான் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக சில மேலை நாடுகள் தெரிவித்த கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும், வேண்டுகோள்களையும் எடுத்துக்கொண்டு, தலைவரை நேரடியாகச் சந்தித்து ஆலோசனை பெறுவதற்காகவே, கேணல் கிட்டு தமிழீழம் புறப்பட்டிருந்தார்.

இந்த சமாதான முயற்சிபற்றியும், அதில் கேணல் கிட்டு நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதுவும், இந்திய அரசுக்கு நன்கு தெரியும். இத்தனையும் தெரிந்த நிலையில் தான் திட்டமிட்ட சூழ்ச்சிமூலம், கேணல் கிட்டுவை இந்திய அரசு சாகடித்தது. ✱

# 'குட்டிசிறி'

**வா**னத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் குண்டுவீச்சு விமானம் 'இரையைக் கண்ட கரிக்குருவி மாதிரி' குத்தெனச் சரிந்து பாய்கையில், விமான எதிர்ப்புத் துப்பாக்கியைச் சட்டென உயர்த்தி விமானத்தின் போக்குக்கு ஏற்ப ரவைகளைத் தீர்ப்பதற்கு, ஒரு தனித்திறமை வேண்டும். குட்டிசிறிக்கு இது நிறையவே பிடிக்கும். பெரும்பாலான சண்டைகளில் '50 கலிபர்' துப்பாக்கிக்கு அருகில்தான் அவன் நின்றிருக்கிறான்.

சின்ன வயதிற்கே உரிய போட்டா போட்டியுடன் வானூர்திகளுடன் இவன் சண்டையிடுவான். பதிந்து சரியான இலக்கைத் தாக்குவதற்கு வானூர்திகளை இவன் விடுவதே இல்லை. சண்டையின் முடிவில் வானூர்திகளின் இலக்கு, விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடன் அலையும் இவர்களது 'பிக்கப்' வண்டிகளாகத்தான் இருக்கும்.

குட்டிசிறி ஆபத்துகளுக்கு ஒருபோதும் அஞ்சுவதில்லை. விமானங்களுடனான அவனது சண்டைகளும் ஓய்வதில்லை.

அந்த உற்சாகம் நிறைந்த இளைஞனின் போராட்ட வாழ்க்கையே வேறானதுதான். உலகம் வியக்கத்தக்கது.

அவன் இயக்கத்திற்கு வரும்பொழுது சின்னவனாக இருந்தான்; மெல்லியவனாக இருந்தான். ஏற்கெனவே அங்கு சிறி என்றொரு தோழன் இருந்தபடியால், அவனது தோற்றத்துக்கு ஏற்றமாதிரி குட்டிசிறி என்ற பெயர் நிலைத்துவிட்டது.

புலிகளின் முகாம் ஒன்றில் தற்காலிக பயிற்சியுடன், குட்டிசிறியின் போராட்ட வாழ்க்கை ஆரம்பமானது.

முதலில் தோட்டா கட்டும் வேலைதான் அவனுக்குத் தரப்பட்டது. பாவிக்கப்பட்ட ரவைகளின் வெற்றுறைகளை எடுத்து, மருந்து நிரப்பிப் புதிதாக உருவாக்கும் வேலை.

வெடி மருந்துடன் பரிச்சயமான அந்த முதலாவது நாளின் பின்பு அவனது சிந்தனை முழுவதும் வெடிமருந்தியக்கம் தொடர்பாகவே, இருந்தது.

புலிகளின் முதலாவது கண்டுபிடிப்பான ஆறு அங்குல மோட்டார் தயாரிக்கப்பட்ட பொழுது, அதில் அவனது பங்களிப்புப் பெருமளவில் இருந்தது.

யாழ்ப்பாணத்துக்கு அண்மிய கல்லுண்டாய் வெளியில் அந்த எறிகணை செலுத்தி முதலாவது எறிகணையை வெற்றிகரமாக ஏவியபோது, குட்டிசிறி மகிழ்ச்சியில் தத்தளித்தான்.

புலிகளின் வரலாற்றில் இன்று நவீன தொழில்நுட்பங்களோடு பரிச்சயப்பட்டு பல்வேறு வகையான எறிகணை செலுத்திகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், அதன் ஆரம்பப்புள்ளி, மிக மெதுவாக ஆடி அசைந்து செல்லும் இந்த ஆறு அங்குல மோட்டாரிலிருந்துதான் வெளிப்பட்டது.

அந்த மோட்டாருக்கு 'குட்டிசிறி' என்ற பெயரே இடப்பட்டது.

கோட்டை இராணுவ முகாமை நோக்கி அந்த மோட்டார், எறிகணைகளைச் செலுத்தத் தொடங்கிய பொழுது, குட்டிசிறி அருகில் நின்றான்.

முதலாவது எறிகணை முற்றவெளிக்குள் பயனற்று விழுந்து வெடித்தது.

இரண்டாவது எறிகணை சற்று முன்னேறி, கோட்டை அகழிக்குள் விழுந்தது.

மூன்றாவது எறிகணை புலிகளின் ஆர்வமான பார்வைகளை இரசித்துக் கொண்டே, கோட்டை மதிற்சுவரைத் தாண்டி உள்ளே விழுந்து அதிர்ந்தது.

மதிலின் மறைவிற்கு உள்ளே இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு, பலர் காயப்பட்டு இருந்தனர்.

அந்த எறிகணைதான், கோட்டையிலிருந்த ஆக்கிரமிப்பாளரின் நிம்மதியான உறக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.


குட்டிசிறி வெடிமருந்தியக்கம் தொடர்பாக நிறைந்த அறிவு பெற்றிருந்தான் அவன் பெரும்பாலானவற்றை அனுபவங்களிலிருந்துதான் கற்றுக்கொண்டான்.

இன்று உலகமே வியக்கும் தொழில்நுட்ப அறிவு எம்மிடம் இருக்கிறது என்றால் அதற்குள், பத்தாம் வகுப்புடன் கல்வியை இடைநிறுத்திவிட்டு இயக்கத்துள் வந்த இவனின் பங்களிப்பு, வியக்கத்தக்களவில் நிறைந்து கிடக்கிறது.

சண்டைகளில் எவ்வளவு அதிகமாக தீவிரமாக இருந்தானோ அதேயளவு இளகிய மனமும் இவனிடமிருந்தது. தோழர்கள் ஆபத்துகளில் சிக்கும்போதெல்லாம் அழுவான். அதுவும் அவனது இயல்பு.

வெற்றிகளைக் காணும்போதெல்லாம் கட்டுப்படுத்த முடியாமல் மகிழ்ச்சியில் சிரிப்பான். கன்னங்கள் உயர்ந்து, கண்களும் சேர்ந்து சிரிக்கும் குழந்தையின் சிரிப்பு அது.

ஆறு சகோதரங்களுக்குப் பின்பு இறுதியாகப் பிறந்தவன் குட்டிசிறி. குடும்பத்தின் கடைசிப் பிள்ளைகளுக்கே உரித்தான பிடிவாதமும், அதிகாரமும் இந்தச் செல்லப்பிள்ளைக்கு இயக்கத்திற்குள்ளும் இருந்தது.



**லெப். கேணல் குட்டிசிறி**
(இராசையா சிறிகணேசன்)
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
பிறப்பு: 23-08-1967
வீரச்சாவு: 16-01-1993

ஒரு நாள், உலங்கு வானூர்தி ஒன்று யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வட்டமிட்டுப் பதிவதும், ரவைகளைத் தீர்ப்பதுமாக இருந்தது.

எறிகணைத் தொழிற்சாலைக்குத் தேவையான கழிவு இரும்புகளை ஏற்றி வந்த குட்டிசிறியின் 'வான்', அந்த வானூர்தியின் இலக்கானது. சாரதியாக குட்டிசிறியே இருந்தான். அவனொரு சிறந்த சாரதி; எந்த நிலையிலும் பதற்றமில்லாமல் வாகனத்தைச் செலுத்தக்கூடியவன். இயக்கத்திற்குள் வருவதற்குச் சில வருடங்களுக்கு முன்னமே, அவனுக்கு வாகனங்களைச் செலுத்திய அனுபவம் இருந்தது.

அவனுக்காக அந்த உலங்கு வானூர்தி பலமுறை பதிந்து தோற்றது.

தோழர்களின் கேலியான வரவேற்புக்கு நடுவே அவன் முகாமிற்குள் நுழைந்தான். கிட்டண்ணையும் அங்கு நின்றார்.

அவனுக்குக் கண்கள் கலங்கி இருந்தன. ''எனக்கு அடித்துப் போட்டான்'' என்று விம்மினான். அவனை அடித்துத் துரத்த வேண்டும் எனப் பிடிவாதமாக நின்றான்.

அந்தப் பிஞ்சின் மனதைக் கிட்டண்ணை புரிந்துகொண்டார். '50 கலிபர்' துப்பாக்கி பொருத்தப்பட்ட பிக்கப் வண்டி ஒன்று வெளியே சென்றது.

'50 கலிபர்' துப்பாக்கியைக் குட்டிசிறி இயக்கினான். சிறிது நேரம் அவனுக்கும் உலங்கு வானூர்திக்கும் சண்டை. முடிவாக கீழே இருந்து வரும் கடுமையான எதிர்ப்பை உணர்ந்து வானூர்தி சற்று உயர்ந்தது; பின்பு மறைந்தது.

இது அவனது ஒரு சம்பவம். இப்படி அவனின் கதைசொல்ல பல சம்பவங்கள் நிறைந்துபோய் உள்ளன.

கிட்டண்ணை குட்டிசிறியில் மிகவும் அன்பு வைத்திருந்தார். அந் நேரங்களில் மற்றையஎல்லாரையும் விட குட்டிசிறிசின்னவனாக இருந்தான். அதன் காரணமாகவும் எல்லாத் தோழர்களும் அவனில் பாசத்தைப் பொழிந்தார்கள்.

குட்டிசிறி கிட்டண்ணையில் உயிரையே வைத்திருந்தான். அக்காலங்களில், இராணுவ முகாம்களிலிருந்து புறப்படும் படையினருடன் ஒவ்வொருநாளும் சண்டையிட வேண்டி இருந்தது. அப்போதெல்லாம் கிட்டண்ணைக்கு அருகில் அவரது நிழல் போல இவன் நிற்பான்.

தேசவிரோதிகளின் குண்டுவீச்சால், கிட்டண்ணை கால்களில் ஒன்றை இழந்த பொழுது, குட்டிசிறி வேதனையில் தவித்துத் துடித்தான்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதன் பிற்பாடு, மேலதிக சிகிச்சைக்காக கிட்டண்ணை இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் இந்தியாவிற்குச் சென்ற பொழுது, குட்டிசிறியும் அவருடன் சென்றான்.

இந்திய – புலிகள் போர் ஆரம்பித்த பிற்பாடு, நீண்ட நாட்களாக கிட்டண்ணையுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திய இந்திய அரசு, அவரையும் தோழர்களையும் கைதுசெய்து சிறையில் அடைத்தது. குட்டிசிறியும் கிட்டண்ணையுடன் கைது செய்யப்பட்டான்.

இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் இந்திய மண்ணில் இறங்கிய இவர்கள் மீது, முறையான அனுமதிப் பத்திரங்கள் இன்றி இந்தியாவிற்குள் நுழைந்தார்கள் என்ற குற்றத்தை, இந்திய நீதித்துறை சுமத்தியது.

'தம்மை விசாரணை செய்யும்படியும், அல்லது தமிழீழத்திற்குத் தங்களை அனுப்பும்படியும் கோரி' சிறையில், கிட்டண்ணை சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இதன் விளைவாக, புலிப்படை வீரர்கள் கைகால்கள் இறுகப் பிணைக்கப்பட்ட நிலையில் இந்திய விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு, தமிழீழத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

கிட்டண்ணை விடுதலை செய்யப்பட்டார். ஆனால், குட்டிசிறியும் மற்றைய தோழர்களும், தமிழீழத்திலிருந்த இந்தியப் படை முகாம்களுக்கு நடுவில், தொடர்ந்தும் சிறைவைக்கப்பட்டார்கள்.

இந்தப் பிடிவாதம் நிறைந்த செல்லப் பிள்ளை, வளர்ந்ததும் பண்பட்டதும் இந்தியச் சிறைகளில்தான்.

இந்தியர்கள் தமிழீழத்திலிருந்து வெளியேறிச் செல்லும்பொழுது குட்டிசிறியும் விடுதலை செய்யப்பட்டான்.

இப்போது அவன் வளர்ந்திருந்தான். இயல்புகளில்கூட நிறைய மாற்றம். அமைதியாக இருந்தான். ஆனால், கன்னங்கள் உயர்ந்து, கண்களும் சேர்ந்து சிரிக்கும் அவனது சிரிப்பு மட்டும் மாறவே இல்லை.

அதன் பின்பு, குட்டிசிறி தலைவரின் பாதுகாப்பு அணியில் ஒருவனாக இருந்தான். அவரின் அன்புக்குரிய குழந்தைகளில் அவனும் ஒருவன்.

அங்கு நின்று பல்வேறு வேலைகளில் ஈடுபட்டான். பெரும்பாலான வேலைகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புரட்சிகர எழுத்தும் கொள்கை பரப்புகையும்

'திரைகடலோடியும் திரவியம் தேடு'!

எமது மூதாதையோர் கூறிய கூற்று இது.

'திரைகடலோடினோம் – திரவியம் தேடியல்ல'.

கடலில் பயணம்போய் வீரச்சாவடைந்த போராளிகளை நினைவுகூர்ந்து கிட்டண்ணை எழுதிய ஒரு கட்டுரைக்கு, அவர் சூட்டிய தலைப்பு இது.

வீரச்சாவடைந்த போராளிகளைப்பற்றிக் கிட்டண்ணை முப்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். ஒவ்வொன்றும் வேறுவேறுவிதமான சுவைகொண்டவை. போராளிகளின் உள்ளுணர்வை மக்கள் தரிசிக்கும்படி அவற்றைச் சுவையாக எழுத்துருவில் போட்டதில், கிட்டண்ணைக்குப் பெரும் பங்குண்டு.

அதேபோல தாக்குதல் நிகழ்ச்சிகளை – போராளிகளின் வீரத்தை – தியாகத்தை – எல்லோரும் புரியக்கூடிய விதத்தில் இலகு தமிழில் அவரது எழுத்துக்கள் வெளிக்காட்டின.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'தேவி' சஞ்சிகையில் கிட்டண்ணை தொடராக எழுதி வந்த கள அனுபவங்கள், அவரின் போர்க்குணம்கொண்ட புரட்சிகர எழுத்தை, தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தெரியப்படுத்தியது.

இந்திய ஆக்கிரமிப்புக் கால கட்டத்தில் இந்திய அரசு தமிழீழ மக்களுக்குச் செய்த துரோகத்தையும், இராணுவச் சூழ்ச்சிகளையும், இந்தியப் படைகளினால் தமிழீழ மக்கள் சந்தித்த துன்ப துயரங்களையும் உலகிற்கு ஆதாரங்களுடன் வழங்கியதில், கிட்டண்ணைக்குப் பெரும் பங்குண்டு.

இந்திய இராணுவத்தினர் செய்த படுகொலைகள், பாலியல் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை உலகிற்கு அம்பலப்படுத்த, பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தே நாம் சத்தியக் கடதாசிகளைப் பெற்றிருந்தோம்.

அந்தச் சத்தியக்கடதாசிகளையெல்லாம் ஒன்றுசேர்த்து, 'பவான் பேப்பர்கள்' (Pawan Papers)எனப்பெயரிட்டு ஆங்கிலத்தில் அச்சிட்டு, இந்தியப் படைகளின் அரக்கத்தனத்தை இந்திய மக்களுக்கும், உலகிற்கும் புட்டுக் காட்டினார்.

(யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இந்தியப் படைகள் செய்த இராணுவ நடவடிக்கைக்குப் பெயர், 'ஒப்பரேசன் பவான்'– Operation Pawan. இப்பெயரிலேயே அந்தச்சத்தியக் கடதாசிகளின் தொகுப்பு இருந்தது.)

இந்தியாவின் நம்பிக்கைத் துரோகத்தை இடித்துக் காட்டவும், இந்தியக் குடிமக்களுக்கு, இந்தியப் படை தமிழீழ மக்களுக்குச்செய்தகொடுமைகளைச் சுட்டிக்காட்டவும் என்று, You too India? (இந்தியா நீயுமா?) என்ற புகைப்படப் புத்தகத்தை வெளியிட்டார். இது இந்திய அரசின் கொடூரத்தை உலகிற்குக் காட்ட உதவியது.(புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியரான சேக்ஸ்பியரின் நாடகங்களுள் ஒன்றான 'யூலியஸ் சீசரில்' வரும் ஒரு வசனம் ''You too Brutus''? (புருட்டஸ் நீயுமா?). ரோமானிய சக்கரவர்த்தியூலியஸ்சீசரை,அரசவையைச் சேர்ந்த சிலர்சதிசெய்து கொலை செய்கின்றனர். அக்கொலைகாரர்களுள் யூலியஸ் சீசரின் மிகவும் நெருங்கிய நண்பனான புருட்டஸ் என்பவனும் இருந்துவிடுகிறான். புருட்டஸ் தனது குத்துவாளை எடுத்து சீசரைக் குத்துகின்றபோது, ''புருட்டஸ் நீயுமா''? என்று சீசர் ஆதங்கத்துடன்கேட்கின்றதாக, அந்த வசனம் அமைகின்றது. இந்தக் கருத்துருவத்திலிருந்து பிறந்ததே 'இந்தியா நீயுமா'?- You too India? என்ற வாக்கியமாகும்.



தளபதி கிட்டு அவர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்களுள் ஒன்று.

கிட்டண்ணையிடம் இருந்த புகைப்படப் புலமை அதிசயிக்கத்தக்கது. தலைவர் பிரபாகரனது போராட்ட வாழ்வைப் புகைப்படம் பிடித்து, அவற்றை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்ட ஆவணங்களாகத் தந்த பெருமை, கிட்டண்ணையையே சாரும்.

கலை இலக்கியத்துறையிலும் எமது போராளிகள் புலமை பெற வேண்டும் என விரும்பிய கிட்டண்ணை, அதற்கான வழிவகைகளையும் செய்து கொடுத்துப் போராளிகளையும் ஊக்குவித்தார்.

கப்டன் சாளி என்ற போராளியினது கலைத்திறமையைக் கண்ட கிட்டண்ணை, அவரை ஊக்குவித்தார். ஓவியத்திலும் எழுத்துத்துறையிலும் தனது முத்திரையைப் பதித்த கப்டன் சாளியின் படைப்புக்கள், தமிழீழப் போராட்ட இலக்கியத்தில் தனக்குரிய இடத்தைப் பிடித்துள்ளன.

1990 ஆம் ஆண்டு, எமது இயக்கத்தின் சர்வதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட கிட்டண்ணை, பின்னர் லண்டனில் இருந்து 'களத்தில்' என்ற பெயரில் போராட்டச் செய்திகளையும் புலிகளின் அரசியல் - இராணுவ நடவடிக்கைகளுக்குரிய விளக்கங்களையும், உலகெங்கும், வாழும் ஈழத்தமிழர்களுக்கு வழங்கிக்கொண்டிருந்தார்.

அதேவேளை, ஈழத்தமிழர்கள் அதிகம் வாழும் மேற்கு நாடுகளிலிருந்து, போராட்டத்திற்குச் சார்பான பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளிவரச்செய்தார். அவைகளும் வெளிநாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழர்களுக்கு விடுதலை உணர்வையும், தாயகப்பற்றையும் ஊட்டிக்கொண்டே இருக்கின்றன. ❋

## குட்டிசிறி...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனது விருப்பத்திற்குரிய வெடிமருந்துத் தொழில்நுட்பமாகவே இருந்தது. ஆனால், சண்டைகளுக்குச் செல்லவேண்டும் என்ற இவனது துடிப்பைப் பொதுவாகத் தடுத்து நிறுத்த முடிவதில்லை.

அவனது ஆர்வம், உற்சாகம், செயற்படும்பொழுது இருக்கும் உறுதி, வேகம் எல்லாமே வியக்கத்தக்கது. அவன் ஒருபோதும் சோர்ந்து போவதில்லை.

குட்டிசிறியினது போராட்ட வாழ்வின் ஆரம்பம் எப்படி இருந்ததோ அதைப் போலவே, அவனது முடிவும் கிட்டண்ணைக்கு அருகிலேயே இருந்தது.

அது சோகமானது; நினைக்கவே இதயம்தாங்காதது. அது எப்படி இருந்திருக்கும்!

சண்டைக் களங்களில் எல்லாம் எம்.16 துப்பாக்கி ஒன்றுடன் கிட்டண்ணைக்கு அருகில் நின்று, அவரின் கட்டளைகளை நிறைவேற்றியவன், இப்போதும் அப்படித் தான் நிமிர்ந்து உற்சாகமாகச் செய்திருப்பான்.

சாவின் விளிம்பில் நிற்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். முன்பும் அப்படித்தான்; சாவுக்கு முன்னால் நின்று கொண்டுதான் அவன் கிட்டண்ணையின் கட்டளைகளை நிறைவேற்றினான். இப்போதும் ஒன்றும் வித்தியாசமாக இல்லை.

பதினாறு வயதில் சின்னவனாக இயக்கத்திற்கு வந்து கிட்டண்ணைக்கு முன்பு நின்றவன், நீண்ட ஒன்பது வருடப் போராட்ட வாழ்க்கையின் பின்பு, உயர்ந்த இளைஞனாக கிட்டண்ணைக்கு முன்பு நிமிர்ந்து நின்றிருப்பான்.

கட்டளைகளை மட்டும் மிகச் சரியாக, தவறேதும் இல்லாமல் செய்திருப்பான்.

சாவுக்கு முன்பாக கிட்டண்ணைக்கு அருகில் வந்திருப்பான்; அவரைப் பார்த்துச் சிரித்திருப்பான்.

கன்னங்கள் உயர்ந்து, கண்களும் சிரிக்கும் குழந்தையின் சிரிப்பு ......

அதுதான்...... அந்தச் சிரிப்புத்தான் இறுதியாக இருந்திருக்கும். ❋

## இந்திய...


(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடல் எல்லை வரை இழுத்து வந்தது; அத்துடன் கேணல் கிட்டுவும் தோழர்களும் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும்படி, நெருக்குதலையும் உருவாக்கிக் கொடுத்தது.

இந்திய அரசின் இந்த நயவஞ்சகச் செயலை எண்ணி எண்ணி, ஈழத்தமிழினம் குமுறுகின்றது.

இப்படுபாதகச்செயல் தமிழீழ தேசியத்தின் ஆழ்மனதில் ஆழமான வடுவை உண்டாக்கியுள்ளது. இந்த வரலாற்றுக்காயம் காலங்காலமாக அழியாது இருந்து, இந்திய அரசின் உண்மை முகத்தைத் தமிழீழச் சந்ததிகளுக்குச் சொல்லிக் கொண்டேயிருக்கும். ❋

# இந்தியாவின் சதிவலையில் சிக்கி; தளபதி கேணல் கிட்டு, மற்றும் லெப். கேணல் குட்டிசிறியுடன் வங்கக்கடலில் காவியமான வீரர்கள்




மேஜர் வேலன்
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை.




கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.




கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை, பாசையூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.




கடற்புலி
கப்டன் குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தெரு, உதயபுரம், மணியந்தோட்டம்.



கடற்புலி கப்டன் றொசான்
(இரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத் துறை, யாழ்ப்பாணம்.



கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ், ஜான்சன்)
2ஆம் குறுக்குத்தெரு, நாவாந் துறை வடக்கு, யாழ்ப்பாணம்.

# வரலாற்றுப் பதிவில்

"வரலாறே, உன் பதிவுகளைப் பார்க்கலாமா?" என்றேன்.

"நீ யார்?"

"நடந்ததை அறிய விரும்புபவன்" என்றேன்.

"அது போதாது!" எனச் சிரித்தது வரலாறு.

"விடுதலை மண்ணில்..." எனக் கூறி முடிக்கு முன் -

"அப்படிச் சொல்!" என்ற பலத்த ஒலி கேட்டது.

கட்டிடம் ஒன்று தெரிந்தது. அதன் கதவுகள் திறந்தன. அது தொல்பொருட் கூடமா? நிறைந்த நூல் நிலையமா? இல்லை, காலத்தைக் காட்டி நின்ற களஞ்சியப் பெருங்காட்சியகமா?

கண்ணைப் பளிச்சிடும் கருத்து வரிகளும், கவின் கொள் ஓவியங்களும், எட்டிய தூரமெல்லாம் நூல்களும், இன்னும் பல புது சாதன விளக்கங்களும் தெரிந்தன. வளைவுகள், பிரிவுகள் என அவை விரிந்து கொண்டிருந்தன!

சுவரில் ஒரு பெரும் நாட்காட்டி அன்றைய தேதியை - 22 ஆம் நூற்றாண்டை - காட்டி நின்றது! ஆம், அது 22 ஆம் நூற்றாண்டு!

யான் இறந்த, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி நினைவுக்கு வந்தது. இது இங்கு பெரிதல்ல! அசுர அழிவுகளின் நடுவே விடுதலையின் விடிவைக் காட்டி அதற்கு ஒளியான இன்னுயிர்கள், அங்கு அனலாக நின்ற நெஞ்சங்கள், மனத்துள் உயிர்த்தன.

அதன் பின் எழுந்த நிகழ்வுகள் எதுவெதுவோ? பதைப்புற்ற உணர்வோடு பார்த்தேன். எதிரே காணக் கிடைத்த காட்சியில் -

பருத்த பல நூல்கள் இப்போ தூசி படிந்து ஒரு புறம் அடுக்கிக் கிடந்தன!

"அவை அழிந்தொழிந்த ஏகாதிபத்திய நாடுகளின் கதை; அதைத் தொடர்ந்து சிதறுண்ட உலக வல்லரசுகளின் கதை" என்ற ஏளனப் பரிவுடன் குரலொன்று விளக்கிற்று!

"அவை அழிந்த விதம்?"

பதில் போலப் பூகோளப் படமொன்று எதிர்ச் சுவரிற் தெரிந்தது. அங்கு சிதைந்து மங்கிய சில எழுத்தின் மேல் புதிய ஒளிக்கதிர்கள் மின்னின!

"இவை விடுதலை நாடுகள் - விடுதலையை வருவித்த நாடுகள்! பயந்தவை மாண்டதும் துணிந்து தொடர்ந்து எழுந்தவை வாழ்ந்ததும் உலக வராலறு! அழிக்க வருவதை அழிப்பதே அறம்!"

இக்குரலைக் கேட்டபடி உள்ளம் சிலிர்க்க, இதயம் ஆர்ப்பரிக்க, இன்னொரு கூடம் தந்த காட்சியுள் நின்றேன்! அங்கும் இசை வரிகள் முரசொலித்தன!

"நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்தீர்,

நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்!"

ஆம், இவை எம் ஈழத்தின் வரிகள்! எதிர் முன் தெரிவதும் சுதந்திரத் தமிழீழத் தாயகத்தின் திடன் உரைக்கும் வரைபடம்! இவ்வேளை-

மீண்டும் இலத்திரனியல்க்காட்சிகள் எழுந்தன! அவை வரலாற்றுத் தொடர்கள்!

அங்கு ஆணவ அடக்குமுறையின் - கொடூர இன ஒழிப்பின் - கரங்கள் தெரிந்தன.

நீதியை நெரித்தெழுந்த அரசியற் சட்டங்கள், மருந்து வகையிலும் கூடத் தடைகள், படையின் அக்கிகிரமங்கள், படுகொலைகள், நில ஆக்கிரமிப்புக்கள், விமானம் பொழிந்த தீச் சுவாலைகள் - இவ்வளவையும் எதிர்த்து நிற்கிறது -

மக்களின் மன உறுதி; பழகிவிட்ட அஞ்சாமை உணர்வு -

அந்த உறுதிக்கு உயிரூட்டி நிற்கும் தலைமை!

"உயிர் நீப்பர் மானம் வரின்"- தன்மானத்திற்குக் கேடுவரின்-என்ற பொய்யா மொழியை மெய்ப்பித்த புதிய தலைமுறை எழுந்த காலம்! கையிலேஆயுதமும் கழுத்திலே 'சயினைட்டும்' அணிந்திருந்த களம்!

அதன் காட்சிகள் சில மேலும் மீட்டப்படுகின்றன! இதோ -

சிவகுமார், சங்கர்-

மாதோட்டத்திலே சிங்களப் படையினரைக் களமாடிக் கைதாக்கிய மாவீரன் விக்ரர் -

இந்திய - சிங்கள ஆணவப் பரிமாறலுக்குப் படுதோல்வி புகட்டிய புலேந்திரன், குமரப்பா குழுவினர்-

ஆயுத ஆய்விலே உயிர் நீத்த பொன்னம்மான் போன்றோர்-

கரும்புலிகள் மில்லர், போர்க் -

கடற்புலிகள் கொலின்ஸ், காந்தரூபன், வினோத் -

மேஜர் சோதியா, லெப். அனிதா ஆகிய காவிய வரிசைகள் -

தமிழீழ விடுதலைக் குரலை தாயகத்தைக் கடந்தும் ஒலிக்கவைத்த விறல்நிறை திலகங்கள் -

இந்திய அநீதியை எடுத்துரைக்கத் தம்மை ஆகுதியாக்கிய தியாகி திலீபன்,அன்னை பூபதி -

சமாதானத் தூதுவனாய் வந்து இந்தியச் சதிக்குச் சரணடைய மறுத்து - விடுதலைப் புலிகளின் மரபை ஆழ் கடலிலே பதித்த உலகறிந்த தளபதி கிட்டுவும் மற்றும் ஒன்பது வீர வேங்கைகளும் -

இவ்வித இன்னுயிர்ப் பரம்பரையில் உள்ளோர் ஒன்றிரண்டல்ல, ஆயிரமாயிரம்! இவை வரலாற்றுப் பதிவேட்டின் அழியாத பதிவுகள்! இவ்வேளை-

வெளியிலோர் பரபரப்பு; அது யாதென வினவுமுன் அந்த முனைப்பில் நின்றேன்.

அது ஒரு சர்வதேச ஆய்வுக்குழு. அவர்களுள் சிலர் ஆர்வத்துடன் புலிச்சின்னத்தைத் தம் அங்கியில் அணிந்திருந்தனர். அவர்கள் தளபதி கிட்டு தமது படகினைத் தகர்த்துச் சங்கமமாகிய ஆழ்கடலின் அடியினை ஆய்வுசெய்யப் புறப்படுகின்றனராம்!

- நாக. பத்மநாதன் ✵

# சிங்களஅரசின் புதிய திட்டம்

இராணுவ பலத்தைமட்டும் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தை அழித்துவிடமுடியாது. என்பதை இப்போது பிரேமதாசா நன்குணர்ந்துவிட்டார். ஆனாலும் புலிகள் இயக்கம் அழிக்கப்படவேண்டும்; விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படவேண்டும் என்பதில், அவர் உறுதியாகவே உள்ளார். அதற்காக புதியதொரு திட்டத்தை வகுத்து அதைச் செயற்படுத்த முயற்சி செய்கின்றார். அத்திட்டம் அரசியல், இராணுவ, இராஜதந்திர யுக்திகள் அடங்கிய ஒரு விரிவான திட்டமாகும்.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதிலும் பிரேமதாசா ஒரு தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்கின்றார். அதாவது, அத்திட்டத்தைத் தனது ஆலோசனை என்றோ அல்லது அரசின் நிலைப்பாடென்றோ கூறினால், ஏதாவது ஒரு காரணத்தைவைத்து எதிர்க்கட்சிகள் அதை எதிர்த்தே தீரும் என்பது, அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அதை வெளியிலிருந்தே சமர்பிக்கப்படும் ஒரு தீர்வுத்திட்டமாகக் காட்டி, அதற்கு வெளியிலிருந்தே ஆதரவுப் பிரச்சாரங்கள் செய்து, அதன் பின் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, புலிகளை அழித்துப் போராட்டத்தை ஒடுக்கப் பிரேமதாசா திட்டமிட்டுள்ளார்.

இந்த நோக்கத்துடன் சிறீனிவாசன் என்ற பொம்மையையும் தயான் ஜெயதிலக என்ற பேனையையும் பயன்படுத்துகின்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி நிருவாகப் பகுதிகளாகப் பிரித்து, அதற்கு 'சமஷ்டி' என்ற அலங்காரச் சேலை உடுத்தி, சிறீனிவாசன் தீர்வுத்திட்டம் என்ற பெயர்சூட்டி, தனது யோசனையைப் பிரேமதாசா உலாவவிட்டுள்ளார்.

இங்கே சமஷ்டி எனப் பெயரிடப்பட்டிருக்கும் சொல், தமிழ்மக்களை உளவியல்ரீதியாக மயக்கப் பயன்படுத்தப்படும் அர்த்தமற்ற ஒரு வெறும் வார்த்தைதான். ஆனால் சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்டவுடன், அரசியல் சூட்சுமம் தெரியாத சிங்கள இனவாதிகள் அத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர் இத்தகையவர்களுக்கும் சிங்கள இனத்திற்கும் அத்திட்டத்தின் இலக்குகளையும் இறுதிவிளைவுகளையும் விளக்கி அத்திட்டத்தை ஏற்கச்செய்ய, தனது நிழல் ஆலோசகர்களில் ஒருவரான, 'முன்னாள் கொம்யூனிஸ்ட்' தயான் ஜெயதிலகாவை முடுக்கிவிட்டுள்ளார். இவர் அனுருத்த திலகசிறி என்ற புனைபெயரில் 'சண்டே ஒப்சேவர்' என்ற ஆங்கில வார ஏட்டில், பிரேமதாசாவின் அரசியல் கருத்துருவத்துக்கு ஒரு செயற்பாட்டுவடிவம் கொடுத்து - விளக்கமளித்து - தொடர்ச்சியாக எழுதி வருகின்றார்.

சிறீனிவாசன் தீர்வுத்திட்டம் என்ற பெயரிலுள்ள அரசியற் கருத்துருவமும், அனுருத்த திலகசிறி என்ற பெயரில் தயான் ஜெயதிலக கொடுக்கும் நடைமுறை வடிவமும், இதற்கான விளக்கங்களும்தான் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பாக பிரேமதாசா அரசின் தற்போதைய நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டை அடியொற்றித்தான், இனிவரும் நாட்களில் சிங்கள அரசின் இராணுவ - அரசியல் நகர்வுகள் இருக்கும்.

அடுத்த நடவடிக்கையாக பிரேமதாசா அரசு என்ன செய்யப்போகின்றது என்பதை, அனுருத்த திலகசிறியின் எழுத்திலிருந்து கண்டுகொள்ளலாம்.

புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகவும் - அரசியல் ரீதியாகவும் அழித்தொழிக்கப்படவேண்டும் என்பதை, எந்தவித ஒளிவு மறைவும் இன்றி இவர் எடுத்துக்கூறுகின்றார்.

புலிகள் இயக்கம் இராணுவரீதியாக அழிக்கப்பட்டு சிங்கள இராணுவம் வெற்றிவாகை சூடவேண்டுமாயின், முதலில் தமிழ்மக்களிடமிருந்து புலிகளை அரசியல்ரீதியாக அந்நியமாக்கவேண்டும். இதனைச் சாதிக்கவேண்டுமாயின் ஓரளவாவது நியாயமான தோற்றப்பாடுடைய தீர்வுத்திட்டமொன்றைச் சிங்களஅரசு முன்வைக்கவேண்டும் என, ஆலோசனை கூறுகின்றார்.

வடக்கிற்கும் கிழக்கிற்கும் தனித்தனி மாகாண சமஷ்டியை வழங்கலாம் எனச் சிபார்சு செய்கிறார் [இதுதான் சிறீனிவாசன் பெயரிலுள்ள தீர்வுத்திட்டமாகும்.].

சமஷ்டி என்ற கோட்பாடு தமிழ்மக்கள் மத்தியில் ஒரு சலனத்தை ஏற்படுத்தலாம். ஆனால் வடக்கு - கிழக்கைத் துண்டாடும் தனிமாகாண சமஷ்டியை புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; இந்தமுரண்பட்ட நிலைப்பாடானது தமிழ் மக்களுக்கும் புலிகளுக்குமிடையே ஒரு விரிசலை உண்டுபண்ணும். இவ்விதமான சூழலில் யாழ். குடாநாடுமீது பாரியபடை எடுப்பை மேற்கொண்டு புலிகளை இராணுவரீதியில் அழிக்கலாம் என, அவர் விளக்கிச் செல்கின்றார். தமிழ்மக்கள் குழம்பிப்போகும் அச்சூழலில் இப்படையெடுப்பை நடாத்தினால், இராணுவ வெற்றிகளை ஈட்டுவது சுலபம். அதேசமயம் இப்படையெடுப்பை சர்வதேச நாடுகளும் அங்கீகரிக்கலாம் என, ஒரு நாசகார அணுகுமுறையை விபரிக்கின்றார்.

இந்தத்திட்டம் வெற்றிகரமாக அமையவேண்டும் என்பதற்காக, சிங்கள அரசியல் வாதிகளுக்கும் சிங்கள மக்களுக்கும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கும் ஆலோசனைகளையும், விளக்கங்களையும் அளிக்கின்றார்.

சிங்கள அரசியல்வாதிகளையும் சிங்கள மக்களையும் விழித்து இப்படிச் சொல்கிறார்:

''உங்களுக்கு நாடு எங்கே போய்க்கொண்டிருக்கின்றது என்பது புரியவில்லை. இப்படியே போனால் நாடு பிளவுபடுவதை ஒருவராலும் தடுக்கமுடியாது போய்விடும். எனவே, நாம் எல்லோரும் கட்சி பேதங்களை மறந்துஒன்றுதிரண்டு, புலிகள் தனியரசு அமைப்பதைத் தடுக்கவேண்டும். எனவே முதலில் நீங்கள் பேரினவாதச் சகதியிலிருந்துவெளியேறவேண்டும். சிங்களப் பேரினவாதம்தான் புலிகள் இயக்கத்தை வளர்க்கின்றது; அவர்களது ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்துகின்றது. தொடர்ந்தும் பேரினவாதச் சகதிக்குள் சிங்களவர்கள் நின்றால், நிச்சயம் நாடு பிளவுபடும், புலிகள் தனியரசமைப்பர் அல்லது ஐ.நா. தலையிட்டு, சைப்பிரஸ் பாணியில் ஒரு தீர்வைக் கொடுத்துவிடும் ஆகவே தமிழர்களுக்கு எதுவுமே கொடுக்கக்கூடாது என்ற பேரினவாதக் கொள்கையைக் கைவிட்டு, ஓரளவு நியாயமான தீர்வுத்திட்டத்தைச் சிங்களதேசம் முன்வைக்கவேண்டும். அதுதான் தமிழ்மக்களை தனிநாடமைப்பதிலிருந்து தடுக்கும். வடக்கு-கிழக்கு இணைப்பைச் சிங்களக் கட்சிகள் எதிர்க்கலாம். ஆனால் தனித்தனி மாகாண சமஷ்டியை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என, சிங்கள இனத்திற்குப் புத்திமதி கூறுகின்றார்.

இதேவேளை கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களை விழித்து இப்படிக் கூறுகின்றார்:

''புலிகள் வலுவுடன் இருக்கும்வரை உங்களுக்கு அரசியல் எதிர்காலம் இருக்கமாட்டாது. சிலவேளை உயிரும் இருக்கமாட்டாது. எனவே புலிகள் அழிக்கப்படவேண்டுமாயின் நீங்களும் நிறைய விட்டுக்கொடுப்புகளைச் செய்யவேண்டும் புலிகளைப் போல நீங்களும் தீவிர தமிழ்த்தேசியவாதம் பேசக்கூடாது, அதற்கு உங்களுக்கு அருகதையும் கிடையாது. அத்துடன் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்று குரலெழுப்பவும் கூடாது. நாங்கள் (சிங்கள அரசியல்வாதிகள் - சிங்களப் படைகள் - தமிழ்க் குழுக்கள்) எல்லோரும் ஒரே அணியில் நின்றால்தான் புலிகளை அழிக்க முடியும். புலிகள் இயக்கம் எங்கள் எல்லோரினதும் பொது எதிரி. புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டால்தான் உங்களுக்கு வடக்கு - கிழக்கில் அரசியல் எதிர்காலம் உண்டு'' என, அறிவுரை வழங்குகின்றது.

இவ்விதம் தமிழீழமக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான பிரேமதாசா அரசின் புதிய தீர்வுத்திட்டமும் அதன் இலக்கும், பகிரங்கமாக விளக்கப்பட்டுள்ளன. இதேவேளை சிங்கள அரசியல்வாதிகளுக்கும், பௌத்த குருமார்களுக்கும், சிங்கள மக்களுக்கும் சில அரசியல் சூட்சுமங்களை மறைமுகமாக வலியுறுத்துகின்றது.


அதாவது சமஷ்டி என்ற சொல்லைக்கண்டு சிங்கள மக்கள் மிரளத் தேவையில்லை. இது வெறும் மினுக்குப் பூச்சுத்தான்; வெறும் பெயர் சூட்டல்தான்; உளவியல்ரீதியாக தமிழர்களை மயக்கத்தில் ஆழ்த்தப் பயன்படும் அர்த்தமற்ற - சாதாரண - அரசியற் பதம்தான். எனவே சிங்கள இனம் அஞ்சத் தேவையில்லை. அதேவேளை சமஷ்டிச் சட்டை போட்ட இத்தீர்வுத்திட்டம் புலிகளின் எதிர்ப்பையும் மீறி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால், வடக்கு -கிழக்கு என்று தமிழர்களின் பூர்வீக தாயகம் துண்டாடப்படும். இதன் விளைவாக கிழக்கு சிங்களமயமாகும். இதனால் தமிழர்களின் தாயகக் கோட்பாடு சிதைக்கப்படும். தமிழர்களின் தேசியபலம் நசுக்கப்படும்.

இதேவேளை யாழ். குடாநாடுமீது ஒரு பாரிய படையெடுப்பை நடாத்தி, புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாகத் தோற்கடிக்கவேண்டும்.

புலிகள் இயக்கம்தான் தமிழீழ தேசியத்தின் ஆயுத கவசம். புலிகள் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்படுவதன்மூலம், சிங்களப் பேரினவாதத்திற்குச் சவால்விட்டபடியிருக்கும் தமிழீழ தேசியத்தினது பாதுகாப்புக் கவசம் உடைந்து நொருங்கும். இதன்பின் சிங்களப் பேரினவாதம் தமிழீழ தேசியத்தைக் கொல்லும். தமிழீழ விடுதலைப் போராட்டம் வேரடிமண்ணுடன் பிடுங்கி வீசப்படும். இந்தத் தீவு சிங்கள இனத்திற்கே ஏகபோகமாகிவிடும்

இதுதான், பிரேமதாசா அரசின் தற்போதைய நாசகாரத் திட்டம் ஆகும். இந்தச் சூழ்ச்சிகர அரசியல் தந்திரோபாயங்களை எமது மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு, அரசியல் விழிப்புடன் இருக்கவேண்டும். எமது மக்களுக்குத் தேவை ஒரு நிரந்தர பாதுகாப்பு: ஒரு நிம்மதியான - கௌரவமான - வாழ்வு. இதைவிடுத்து சிங்களப் பேரினவாதம் விரிக்கும் சூழ்ச்சிப் பொறிக்குள் எமது மக்கள் சிக்கக்கூடாது; வார்த்தை ஜாலங்களால் பின்னப்பட்ட அரைகுறைத் தீர்வுத் திட்டங்களைக் கண்டு ஏமாறக்கூடாது; குழப்பமடையக்கூடாது.

நாமும், எமது மக்களும் இதுவரைகாலமும் செய்த முயற்சிகளும், புரிந்த தியாகங்களும், சந்தித்த இழப்புகளும் அர்த்தமற்றுப் போய்விடக்கூடாது. அரசியல் விழிப்புடன் இருப்போம்; தேசிய உணர்வுடன் இருப்போம்!



இவ் இதழுடன், தளபதி கிட்டுவின் படம் ஒன்று சிறப்பு இணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது.

24-12-1992 இல் இருந்து 15-02-1993 வரை

## 54 நாட்களில்-

- △ 188 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர்,
- △ 77 புலிவீரர்கள் வீரச்சாவு அடைந்தனர்.
- △ 89 ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன.

சர்வதேசக் கடற்பரப்பில் வந்துகொண்டிருக்கும் போது இந்தியாவின் சதி வலையில் சிக்கி, சரணடைய மறுத்து 16-01-1993 அன்று தம்முடன் சேர்த்து கப்பலையும் தகர்த்து எமது மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு உட்பட 10 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**